[1st September 1970

Applications received by the Drugs Controller

***64. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :**

(*a*) whether it is a fact that hundreds of applications have been received by the Drugs Controller during the period from 1-10-1969 to 31-12-1969 for approval as 'qualified persons' as per Section 65 (15) (*c*) of the Drugs and Cosmetics Rules, 1945 ; and

(*b*) if so, the action taken thereon ?

மருந்துகள் கட்டுப்பாடு அதிகாரி பெற்றுக்கொண்ட விண்ணப்பங்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1945-ஆம் ஆண்டு மருந்துகள், ஒப்பனைப் பொருள்கள் விதிகளைச் சேர்ந்த 65 (15) (c) பிரிவிற்கிணங்க ''தகுதி பெற்ற நபர்கள்'' என்று ஒப்புதல் பெறுவதற்காக 1.10.1969 முதல் 31.12.1969 வரையுள்ள கால அளவில் மருந்துகள் கட்டுப்பாடு அதிகாரி நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களை வரப்பெற்றார் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) மருந்துக் கட்டுப்பாடு அதிகாரியிடம் 652 விண்ணப்பங்கள் வந்தன.

(இ) அவற்றின்மேல் நடவடிக்கை தேவையில்லை என முடிவு செய்யப்பட்டது.

திரு. எம். எத்திராஜுலு : தகுதி பெற்ற நபர்கள் என்ற ஒப்புதல் அளிப்பதில் இருக்கிற சிரமம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் ; 1945-ஆம் ஆண்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்கான தகுதிகள் அதில் வகுக்கப்பட்டன. அந்த விதிப்படி போதுமான அளவிற்கு ஆட்கள் இல்லாத நிலையில், சிலருக்குச் சலுகை கொடுத்துச் சேர்க்க வேண்டிய நிலை இருந்தது. பிறகு தகுதி பெற்றவர்கள் வந்து விட்டார்கள். அதனல் அந்த விதிப்படி உள்ள தகுதியின் அடிப்படையில் ஆட்களைச் சேர்க்க வேண்டிய நிலைமை வந்தது. அதற்கென பதிவுசெய்து டிப்ளமா பெற்றவர்கள் இருக்கும்போது, நான்காண்டு காலம் பயிற்சி பெற்றவர்கள் அந்தக் குறிப்பிட்ட பரீட்சை எழுதலாம் என்ற விதியும் இருக்கிறது. கல்வித் துறை ஆணைப்படி 31.12.69-க்குள்ளாக பரிட்சை எழுதித் தேர்ந்தால், அதற்குத் தகுதியுடையவர்களாகலாம் என்றிருப்பதை அங்கே பயிலுகிற மாணவர்கள் எதிர்க்க ஆரம்பித்தார்கள். பரீட்சை எழுதச் சொல்லி அவர்களுக்கு இடம் கொடுத்தால், புதிதாக

வருகிற எங்களுக்கு அந்த வேலை பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று எதிர்ப்பு தெரிவித்ததன் பேரில், அப்படிப் புதிதாக வருகிறவர்களுக்கு வேலை அளிக்க வேண்டியிருக்கிற காரணத்தால், டிப்ளமா இதற்கென்று பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதால், இந்த விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

Free Reading Room for women and children

*65. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the present stage of the construction of the building for Free Reading Room for women and children at Anaikulam Ground, Singara Thoppu, Tiruchi town by the Tiruchi District Local Library Authority, for which foundation-stone was laid by the Prime Minister in 1966 ?

மாதர், குழந்தைகள் இலவச படிப்பக கட்டிடம்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் திருச்சி நகரத்தில் சிங்காரத் தோப்பு, ஆனைக்குளம் மைதானத்தில் மாதர், குழந்தைகள் இலவச படிப்பக கட்டிடம் கட்ட 1966-ஆம் ஆண்டு பிரதமர் அவர்களால் கால்கோள் போட்டது, தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தொடக்கத்தில் நூலகத்தை கட்டவேண்டுமென்ற இடத்தை பின்பு திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழு, மேற்கு போலிவார்டு சாலையிலுள்ள இப்ராஹிம் பூங்கா என்னும் இடத்துடன் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டுமென நினைத்ததால் நூலக கட்டிட வேலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. திருச்சி நகரவையின் தீர்மானம் இதுவரை தெரியவில்லை.

திரு. டி. கே. சுப்பையா : ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆனைக்குளம் மைதானத்தை மாற்ற வேண்டிய அவசியம் என்ன ? அப்படி மாற்றினால். அந்த இடத்தை என்ன செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சிங்காரத் தோப்பு என்ற இடத்தில் 33 சென்ட் இடத்தைப் பெற்றார்கள். அந்த இடத்தில் 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்ட இருந்தார்கள். ஆனால் அதைவிட்டு மேல் போலிவார்டு ரோடில் இப்ராகிம் பார்க்கில் இந்தக் கட்டிடம் கட்டப்பட்டால், அந்த இடம் மிகவும் வசதியாகவும் தகுதியாகவும் இருக்கும் என்று நகரசபையை அணுகினார்கள். அந்த இடத்தை நகரசபை தந்து விட்டால், அதே அளவுக்கு வேறு இடத்தை அதற்குப் பதிலாகத் தந்து விடுகிறோம் என்று சொன்னார்கள். 33 சென்ட் நிலத்தை இங்கே தந்துவிட்டால், இங்கே கட்டுகிற கட்டிடம் பொதுவான இடத்திலும் பார்வையான இடத்திலும் இருக்கும் என்ற அடிப்படையில் தான், அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று நூலக ஆணைக்குழுத் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இது குறித்து நகர சபையின் தலைவருடைய இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.